**இனிமையான குழந்தைகளே, நீங்கள் இறந்து விட்டால், உலகமே இறந்ததாகி விடும். பாபாவினுடையவர் ஆவது என்றாலே தேக அபிமானத்தை விட்டு விடுவதாகும். ஒரு பாபாவைத் தவிர வேறு எதுவும் நினைவுக்கு வரக் கூடாது.**

கேள்வி: கடைசி நேரத்தை அருகாமையில் இருப்பதை பார்த்துக் கொண்டே, எந்த சுலோகனை எப்போதும் நினைவில் வைக்க வேண்டும்?

பதில்: சிலருடைய செல்வம் மண்ணோடு மண்ணாக புதைந்து விடும். சிலருடையதை அரசாங்கம் எடுத்துக் கொண்டு விடும்....... இந்த சுலோகனை எப்போதும் நினைவில் வையுங் கள். ஏனெனில் இப்போது துக்கத்தின் மலை விழப்போகிறது. அனைவருக்கும் மரணம் ஏற்படப் போகிறது. குழந்தைளாகிய நீங்களோ, பாபாவின் மீது முழுமையான பலி ஆகிறீர்கள். உங்களுடைய அனைத்தும் நல்ல முறையில் பயன்படுத்தப்படுகிறது. நீங்கள் ஒரு பிறவிக்கு பலி ஆகிறீர்கள், பாபா 21 பிறவிகளுக்கு பலி ஆகிறார். 21 பிறவிகளுக்கு நீங்கள் தாய் தந்தையிட மிருந்து ஆஸ்தி அடைய வேண்டிய அவசியம் இருக்காது. பிறகு துவாபர யுகத்திலிருந்து எப்படிப்பட்ட கர்மம் செய்கிறோமோ, அப்படியே பலன் கிடைக்கிறது.

பாடல்: நான் ஒரு சிறிய குழந்தை..............

ஓம் சாந்தி. உயர்ந்ததிலும் உயர்ந்தவர் பகவான் என்பதை மனிதர்கள் மட்டும் தான் தெரிந்திருக் கிறார்கள். பகவானை எப்போதும் பரமபிதா பரமாத்மா என்று சொல்கிறார்கள். அவருடைய பெயரும் உயர்ந்தது மற்றும் அவருடைய இடமும் உயர்ந்தது. அனைத்தையும் விட உயர்ந்த மூலவதனத்தில் இருக்கிறார். இப்போது இறை தந்தை என்று சொல்கிறோம் என்றால், நாம் கண்டிப்பாக அவருடைய குழந்தைகள் ஆவோம். நம்மை தந்தை என்று சொல்ல முடியாது. சர்வவியாபி என்று சொல்வதனால் அனைவரும் தந்தை ஆகி விடுகின்றனர். அவர் எப்போதும் உயர்ந்ததிலும் உயர்ந்த பரந்தாமத்தில் இருக்கக்கூடிய பரமபிதா பரமாத்மா என்று சொல்லப் படுகிறார். உயர்ந்ததிலும் உயர்ந்தவர் பகவான் என்பதனால் தான், அனைத்து பக்தர்களும் அவரை நினைவு செய்கின்றனர். பக்தர்களுக்கு பக்தியின் பலனைக் கொடுக்க பகவானே, இங்கே வர வேண்டி இருக்கிறது என்று சொல்கிறார்கள். அவர் சொர்க்கத்தை படைக்கக் கூடிய தந்தை ஆவார். படைப்பவர் கண்டிப்பாக புதிய உலகத்தைத் தான் படைப்பார். ஆக அவர் எங்கு வருவார்? தூய்மையற்ற உலகத்திலா அல்லது தூய்மையான உலகத்திலா? பாருங்கள், இது நல்ல முறையில் தாரணை செய்ய வேண்டிய விசயம் ஆகும். நீங்கள் ஒன்றும் சிறியவர்கள் கிடையாது. சரீரத்தின் உறுப்புகள் பெரியதாக இருக்கின்றன அல்லவா! அனைவரும் தந்தையை நினைவு செய்கின்றனர் என்று உங்களுக்குத் தெரியும். அவர்கள் இந்த உலகம் துக்கமானது என்று புரிந்து கொள்கின்றனர். எங்களை சுகம் சாந்தி நிறைந்த இடத்திற்கு அழைத்துச் செல்லுங்கள் என்கின்றனர். நாடகப்படி பாபா வரத் தான் வேண்டும். இது உருவாக்கப்பட்ட நாடகம் ஆகும். இதில் எந்த வித்தியாசமும் ஏற்பட முடியாது. உலகத்தின் வரலாறு புவியியல் சக்கரம் சுற்றிக் கொண்டே இருக்கிறது. 4 யுகங்கள் சுற்றிக் கொண்டே இருக்கிறது. கலியுகத் திற்குப் பிறகு சங்கமயுகம் ஏற்படுகிறது. கலியுகம் மற்றும் சத்யுகத்தின் இடையில், இது நன்மை தரக்கூடிய லீப் யுகமாகும். இது புருஷோத்தம யுகம், அதாவது

உத்தமரிலும் உத்தமமான மரியாதா புருஷோத்தமர் ஆவதற்கான யுகமாகும். இதைப் போல உத்தமமான யுகம் வேறு எதுவும் கிடையாது. சத்யுகமும் திரேதா யுகமும் சங்கமிக்கும் யுகம் கூட உயர்ந்தது கிடையாது. அதில் சுகத்திற்கான 2 கலைகள் குறைந்து போய் விடுகிறது. இந்த சங்கம யுகத்துக்குத் தான் மகிமை இருக்கிறது. பாபா உயர்ந்ததிலும் உயர்ந்தவர் என்று உங்களுக்குத் தெரியும். அவர் சர்வவியாபி கிடையாது. குழந்தைகள் எத்தனை தவறுகள் செய்கின்றனர். ஆனால் நாடகப்படி அந்த தவறும் நடக்கத் தான் வேண்டும். பிறகு நான் வந்து அவர்களை தவறிழைக்காத வர்களாக ஆக்குகின்றேன். பாபா சொல்கிறார், என்னை நீங்கள் உயர்ந்ததிலும் உயர்ந்த பகவான் என்று சொல்கிறீர்கள். பிறகு நான் குழந்தைகளாகிய உங்களை என்னை விட உயர்ந்தவராக ஆக்குகின்றேன். அதனால் தான் பக்தர்கள் நினைவு செய்கின்றனர். ஆனால் சர்வவியாபி என்று சொல்லிவிட்ட காரணத்தினால், அனைத்தை யும் மண்ணோடு மண்ணாக்கி விட்டனர். ஆகையினால் அவர்களும் அப்படியே ஒன்றுமில்லாதவர்களாக, துக்கமானவர்களாக ஆகி விட்டனர். பாரதம் சுகதாமமாக இருந்தது. இப்போது துக்கதாமமாக ஆகிவிட்டது. இப்போது பாபா சொல்கிறார், நான் உங்களை என்னை விடவும் உயர்ந்தவர்களாக ஆக்குகின்றேன். நான் பரந்தாமம் பிரம்மாண்டத்தில் வசிக்கின்றேன். நீங்கள் கூட அங்கே இருந்தீர்கள். பிறகு இங்கே நடிக்க வருகிறீர்கள். பிராமணர்கள் தான் உயர்ந்ததிலும் உயர்ந்த உச்சிக்குடுமி என்று தெரிந்திருக்கிறீர்கள். ஆக உயர்ந்ததிலும் உயர்ந்த சிவபாபாவுக்கு என்ன அடையாளம் கொடுப்பது! அவரோ நட்சத்திரமாக இருக்கிறார். ஆத்மாவைப் போலத் தான் பரமாத்மாவும். புருவத்தின் மத்தியில் மின்னக்கூடிய நட்சத்திரத்தைப் போல பிரகாசிக்கிறது. ஆத்மாவின் ரூபமே நட்சத்திரம் தான் ஆகும். இது உருவாக்கப்பட்ட நாடகம் ஆகும். இதில் ஆத்மாக்கள் அனைவரும் பிரம்மாண்டத்தில், நிராகார மரத்தில் (பரந்தாமம்) இருக்கின்றனர். அது தான் நிர்வாண தாமம் என்று அழைக்கப்படுகிறது. ஆத்மாக்கள் நிராகார உலகம் இனிமையான வீட்டிலிருந்து வருகிறார்கள். இப்போது துக்கதாமமாக இருக்கிறது. எத்தனை பிரிவினைகள் இருக்கின்றன! சத்யுகத்தில் எந்த பிரிவினையும் கிடையாது. பாரதம் தான் உயர்ந்த கண்டமாக இருந்தது. பாபாவை சத்தியமானவர் என்று சொல்லப்படுகிறது. பாபா சொல்கிறார், சத்தியமான கண்டத்தை ஸ்தாபனை செய்ய வருகின்றேன் என்றால் கண்டிப்பாக புதிய உலகத்தைப் படைத்து, பழைய உலகத்தை அழிக்க வேண்டி இருக்கிற தல்லவா! இப்போது துக்கத்தின் மலையே விழப்போகிறது. அனைவருடைய செல்வமும் மண்ணுக்குள் புதைந்து போய் விடும்....... .தங்களுக்குள் வெறுப்பு ஏற்படுகின்ற போது, தாம் உருவாக்கி வைத்துள்ள அணு குண்டுகளை கடைசியில் கண்டிப்பாக பயன்படுத்தி அழிக்க வேண்டும் என்று அவர்களும் புரிந்து கொள்கிறார்கள். ஆனால் இப்படிப்பட்ட பொருட்களை உருவாக்குவதற்கு யார் தூண்டு தல் கொடுக்கிறார் என்பது தெரிவதில்லை. வயிற்றிலிருந்து ஆயுதங்கள் வந்ததாக கீதையில் கூட இருக்கிறது. இவையனைத்தும் புத்தியின் விசயங்களாகும். தன்னுடைய நாட்டை அழிப்பதற்கு அணுகுண்டுகளை உருவாக்குகிறார்கள். யாதவர்கள், கௌரவர்கள், பாண்டவர்கள் என்று மூன்று சேனைகள் இருக்கிற தல்லவா! யாதவர்களும் கௌரவர்களும் சண்டையிட்டு மடிகின்றனர். மற்றபடி கௌரவர்கள் மற்றும் பாண்டவர்களிடையே சண்டை ஏற்படுவதில்லை. நீங்கள் யாருடனும் யுத்தம் செய்வதில்லை. நீங்களோ யோகபலம் நிறைந்த இராஜ ரிஷிகளாவீர்கள். சன்னியாசிகள் ஹடயோக ரிஷிகளாவர். அவர் சங்கராச்சாரியார் மற்றும் இவர்

சிவாச்சாரியார் ஆவார். கிருஷ்ண ஆச்சாரியார் என்று சொல்ல மாட்டர்கள். அவர் இப்போது மீண்டும் ஸ்ரீ கிருஷ்ணர் ஆவதற் காக ஞானம் எடுத்துக் கொண்டிருக்கிறார். இந்த ராஜதானி ஸ்தாபனை ஆகிக் கொண்டிருக்கிறது. நீங்கள் தூய்மையற்ற முட்களிலிருந்து, தெய்வீக மலர்களாக ஆகிக் கொண்டிருக்கிறீர்கள்.

பாட்டில் கூடக் கேட்டீர்கள் - வாருங்கள்! அஜாமில் போன்ற பாவிகளையும் உயர்ந்தவர்களாக மாற்றுங்கள். பதீத பாவனன் என்று பாடப்படுகிறார். அவர் தான் சத்குருவாக இருக்கிறார். உங்களை நரனிலிருந்து நாராயணனாக, ராஜாவுக்கெல்லாம் ராஜாவாக மாற்றுகிறார். இது தான் இங்கே லட்சியம் ஆகும். இது பாடசாலை அல்லவா! இங்கே நாம் நரனிலிருந்து நாராயணனாக நாரியிலிருந்து லக்ஷ்மியாக ஆகின்றோம். இதில் மூட நம்பிக்கைக்கான விசயமே இல்லை. பள்ளிக்கூடங்களில் கூட லட்சியம் இருக்கிறதல்லவா! நீங்கள் எல்லைக்கப்பாற்பட்ட ஆஸ்தி எடுப்பதற்காக பாபாவிடம் வந்திருக்கிறீர்கள். அந்த உலகத்திற்கான ஆஸ்தியை இங்கே எடுக்க வேண்டியிருக்கிறது. அதுவோ சுகதாமம் ஆகும். இது துக்கதாமம் ஆகும். பாடலில் கேட்டீர்கள் - நான் ஒரு சிறிய குழந்தையாக இருக்கிறேன்... நீங்கள் குழந்தைகள் அல்லவா! சிலர் 25 வயதுக் குழந்தையாக, சிலர் 20 வயதுக் குழந்தையாக இருக்கிறீர்கள். பாபா சொல்கிறார், ஒரு நாள் குழந்தை கூட ஆஸ்தி எடுக்க முடியும். எல்லைக்கப்பாற்பட்ட பாபா பாரதத்தை வைரத்துக்குச் சமமாக ஆக்க வந்திருக்கிறார். சத்யுகத்தில் எத்தனை வைர வைடூர்யங்களால் ஆன மாளிகைகள் இருந்தன! அதைச் சொல்லி முடியாது. பிறகு எப்போது பக்தி மார்க்கம் ஆரம்பமாகிறதோ, அப்போது தூய்மையற்ற ராஜாக்கள் அமர்ந்து சோமநாத் போன்ற கோயில் களைக் கட்டுகின்றனர். ராஜாக்களிடம் கோயில்கள் இருக்கின்றன. இன்றைய காலத்தில் நிறைய கோயில்கள் உருவாக்கிக் (கட்டிக்) கொண்டே இருக்கின்றனர். அனைத்திலும் முக்கிய மான கோயிலை யார் உருவாக்கியிருப்பார்கள்? யார் பூஜ்ய நிலையிலிருந்து பூஜாரி ஆகிறா ர்களோ, அவர்கள் தான் உருவாக்கியிருக்க வேண்டும். நீங்கள் தான் பூஜைக்குரியவர் மற்றும் நீங்கள் தான் பூஜாரி என்ற இந்த மகிமை பரமபிதா பரமாத்மாவுக்காக அல்ல. அவருடைய மகிமை அனைத்திலும் தனிப்பட்டது. ஒவ்வொரு மனிதனுடைய மகிமை தனிப்பட்டதாகும். உயர்ந்ததிலும் உயர்ந்த மகிமை பாபா வினுடையது ஆகும். அவர் மூலம் நீங்கள் 21 பிறவி களுக்கு ஆஸ்தி அடைகிறீர்கள். பிறகு துவாபர யுகத்திலிருந்து நீங்கள் லௌகீக தந்தைக்கு குழந்தையாகி, எப்படி, எப்படி கர்மம் செய்கின்றீர்களோ, அப்படியே பிறவி எடுக்கிறீர்கள். பணத்தை தானம் செய்வதனால், ஒரு பிறவிக்கான அல்ப கால சுகத்தின் ஆஸ்தி கிடைத்து விடுகிறது. ராஜாக்களும் நோய்வாய்ப்படுகிறார்கள் அல்லவா! சொர்க்கத்தில் நீங்கள் நோய் வாய்ப்படுவதில்லை. உங்களின் சராசரி ஆயுள் 150 வருடங்களாக இருக்கும். எத்தனை ஆரோக்கியமாக இருந்தீர்கள்! நோய், துக்கத்தின் பெயரே கிடையாது. சிவபாபா குழந்தைகளுக் காக பரிசு கொண்டு வருகின்றார். இது தான் உள்ளங்கையில் சொர்க்கம் என்று சொல்லப்படு கிறது. முயற்சி செய்ய வேண்டும்--சூரியவம்சத்தினர் ஆகுங்கள் அல்லது சந்திர வம்சத்தினர் ஆகுங்கள் அல்லது பணக்கார பிரஜை ஆகுங்கள். ஆனால் கிருஷ்ணரைப் போல ஆவது தான் லட்சியம் ஆகும். மற்றபடி கிருஷ்ணருடைய மகாவாக்கியம் என்று ஒருபோதும் சொல்லப்பட வில்லை. இது பகவானுடைய மகாவாக்கியம் ஆகும். இது ருத்ர ஞான யக்ஞம் என்று புரிய

வைக்கப்படுகிறது. ராஜஸ்வ என்றால் சுயராஜ்யத்தை அடைவதற்காக என்று அர்த்தம். சாஸ்திரங்களில் கூட பெரிய கதையை எழுதி விட்டர்கள். பாபாவிடம் பலி ஆவதனால், பாபா பிறகு 21 பிறவிகளுக்கு பலி ஆகிவிடுகின்றார். பாபா குழந்தை களகிய உங்களை உயர்ந்ததிலும் உயர்ந்தவராக்குகிறார். பிரம்மாண்டத்தில் இருக்கக் கூடியவர் பிரம்மாண்டத்தின் எஜமானர் அல்லவா! பிறகு நீங்கள் உலகத்துக்கு எஜமானர் ஆகிறீர்கள். நான் உலகத்துக்கு எஜமானர் ஆவதில்லை. உங்களை அப்படி ஆக்க வருகின்றேன்.

பதீத பாவனா வாருங்கள்! வந்து தூய்மை யாக்குங்கள்! என்று நீங்கள் சொல்கிறீர்கள். பிறகு எப்படி சர்வ வியாபி ஆனார்? சத்கதியை வழங்கக் கூடிய பதீத பாவனர் ஒரே ஒரு தந்தை மட்டும் தான். இந்த நேரம் அனைவரும் தமோபிரதானம் ஆகிவிட்டனர். சதோ-ரஜோ-தமோவை அனைவரும் கடந்தே ஆக வேண்டும். ஒவ்வொரு பொருளும் முதலில் சதோபிரதானமாக இருந்து பிறகு தமோபிரதானமாகிறது. சத்யுகத்தில் தேவி தேவதைகளும் சதோபிரதானமாக இருந்து பிறகு திரேதாவில் சதோ ஆகி அதாவது இராம ராஜ்யத்தில் க்ஷத்திரியர்கள் ஆகி பிறகு ரஜோவில் வைஷியர்களாகவும், தமோவில் சூத்திரர்களாகவும் வர்ணங்கள் மாறுகின்றனர் அல்லவா! விராட ரூபத்தில் தேவதா, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர வர்ணங்களைக் காண்பிக் கிறார்கள். பாபாவையும் பிராமணர்களையும் மறைத்து விடுகின்றனர். பிராமணர்களாகிய நீங்கள் தேவதைகளையும் விட உயர்ந்தவர்கள். ஏனெனில் நீங்கள் பாரதத்துக்கு உயர்ந்த சேவை செய்கிறீர்கள். நீங்கள் ஸ்ரீமத்படி இருக்கிறீர்கள். சிறந்ததிலும் சிறந்த, உயர்ந்ததிலும் உயர்ந்த பகவானின் வழி கிடைக்கிறது. அதன் மூலம் நீங்களும் ஸ்ரீ ஸ்ரீ சிவபாபா மூலமாக ஸ்ரீ லக்ஷ்மி நாராயணர் ஆகின்றீர்கள். பிறகு மாயையின் பிரவேசம் ஏற்படும் போது நீங்கள் அசுரர் ஆகி விடுகின்றீர்கள். கல்ப-கல்பத்திற்கும் பாபா இப்படி வந்து புரிய வைக்கிறார். பாபா உங்களை மனிதரிலிருந்து தேவதை ஆக்குவதற்காக ஞானக் கலசத்தை மாதர்களாகிய உங்கள் மீது வைக்கிறார். சன்னியாசிகளோ மாதர்களை நரகத்தின் வாசல் என்று புரிந்து கொள்கின்றனர். அவர்களைத் திட்டுகின்றனர், பிறகு அதே மாதர்களிடம் வந்து பிச்சை கேட் கின்ற காரணத்தினால் கடன் ஏறி விடுகிறது. ஆகையால் கிரகஸ்திகளிடம் (குடும்பத்தில் இருப்பவர்களிடம்) வந்து மறுபிறவி எடுத்து மீண்டும் சன்னியாசம் செய்கின்றனர். மறுபிறவி எடுக்கவில்லையானால் பிறகு இத்தனை சன்னியாசிகள் எங்கிருந்து வருகின்றனர்?

பாரதம் தூய்மையாக இருந்தது. மேலும் சம்பூர்ண நிர்விகாரி உலகம் என்று சொல்லப் படுகிறது. தாங்கள் சர்வகுணங்கள் நிறைந்தவர்...... .என்று தேவதைகளின் முன்னால் மகிமை பாடுகிறார்கள். பிறகு குணமற்ற எனக்குள் எந்த குணமும் இல்லை என்று தன்னைச் சொல்லிக் கொள்கிறார்கள். சர்வகுணங்கள் நிறைந்தவர் என்பது சிவபாபாவின் மகிமை கிடையாது. இது தேவதைகளின் மகிமை ஆகும். ஆனால் முழுமையான ஞானம் இல்லாத காரணத்தினால் இராமர்-சீதை முன்பு கூட இந்த மகிமை செய்கின்றனர். சிவஜெயந்தி கொண்டாடுகிறார்களே தவிர ஒன்றும் புரிந்து கொள்வதில்லை. ஆக பாபா சொல்கிறார்--இப்போது உங்களுக்கு ஞானத்தின் மூன்றாம் கண் திறக்கப்படுகிறது. தேவதை களுக்கு மூன்றாம் கண் இருப்ப தில்லை. சித்திரங்களில் தேவதைகளுக்கு அப்படிக் காட்டுகிறார்கள். ஆனால்

உண்மையில் அது (மூன்றாம் கண்) உங்களுடையதாகும். ஆனால் மூன்றாம் கண் திறந்து, பிறகு அது மூடப்பட்டும் விடுகிறது. ஆச்சரியப்படும் வகையில் கேட்பார்கள், விரும்புவார்கள், பிறருக்கும் சொல்லிக்கொடுப்பார்கள், பிறகும் கைவிட்டு போய் விடுகிறார்கள். மிக நல்ல நல்ல குழந்தை கள் கூட மாயையிடம் தோற்கின்றனர். 5 விகாரங்களின் மீது வெற்றி அடையச் செய்வதற்கு பாபா நம்மை யுத்தம் செய்விக்கிறார். மற்றபடி வேறு எந்த யுத்தமும் கிடையாது. இப்போது நீங்கள் பிரம்மா வம்சத்தினர், பிறகு தேவதை ஆவீர்கள். இப்போது சூத்திரனிலிருந்து பிராமண வர்ணத்திற்கு வந்துள்ளீர்கள். இந்த நேரம் சிருஷ்டிச்சக்கரம் முழுமையாக புத்தியில் உள்ளது. நாடகம் முடிவடைகிறது. பாபா கூட்டிச் செல்வதற்காக வந்திருக்கிறார். மாயை அனைவரையும் தூய்மை இழக்க வைத்து விட்டது. இப்போது பாபா சொல்கிறார்- யோக அக்னி மூலம் நீங்கள் பாவ கர்மங்களை வென்றவர் (விகர்மாஜீத்) ஆகுங்கள். இதில் உழைப்பு தேவை. வேறு எதுவும் செய்ய வேண்டாம், பாபாவை நினைவு செய்ய வேண்டும். 'பாபா நாங்கள் உங்களுடையவராக இருந்தோம். நீங்கள் எங்களை பிறகு சத்யுகத்திற்கு அனுப்பினீர்கள், சத்யுகத்தில் பல பிறவிகள் எடுத்தோம். பிறகு திரேதாவுக்கு வந்தபின் திரேதாயுகத்தில் பல பிறவிகள் எடுத்தோம்'. இவருக்கும் கூட (பிரம்மா பாபா) பாபா சொல்கிறார்--நீங்கள் உங்களுடைய பிறவிகளைப் பற்றி அறியவில்லை, அதை நான் சொல்கிறேன். மனிதர்கள் எப்படி 84 பிறவிகள் எடுக்கின்றனர்? 84 லட்சத்திற்கான விசயமே ஏற்பட முடியாது. கல்பத்தின் ஆயுள் 5000 வருடங்களாகும். இந்த சாஸ்திரங்கள் உங்களை ஆழ்ந்த உறக்கத்தில் ஆழ்த்தி விட்டது. இப்போது பாபா உங்களை எழுப்பியிருக்கிறார். நீங்கள் விழித்தெழுந்து பாபாவிடமிருந்து ஆஸ்தி எடுத்துக் கொண்டிருக் கிறீர்கள். நீங்கள் சிறிய குழந்தைகளாக இருக்கிறீர்கள், சிலர் 3 மாதம், சிலர் 4 மாதம். நீங்கள் ஈஸ்வரனுடையவர் ஆகின்ற காரணத்தினால் நீங்கள் இறந்து விட்டால் முழு உலகமே இறந்து விடும். பாபாவினுடையவர் ஆகும்போது தேக அபிமானம் அழிந்து போய்விடுகிறது. பாபா சொல்கிறார்--சரீரத்தில் இருந்து கொண்டே, குடும்ப விவகாரங்களில் இருந்து கொண்டே தாமரை மலருக்குச் சமமாக இருக்க வேண்டும். சத்யுகத்தில் நீங்கள் தூய்மையான சம்மந்தத்தில் இருந்தீர்கள். இப்போது தூய்மையற்ற குடும்ப தர்மத்தைச் சேர்ந்தவர்கள் ஆகி விட்டீர்கள். தேவி தேவதா தர்மத்தைச் சேர்ந்த நீங்கள் தான் 84 பிறவிகள் எடுக்கிறீர்கள். பக்தியைக் கூட நீங்கள் தான் துவக்கி வைக்கிறீர்கள். பூஜைக்குரியவரிலிருந்து பூஜாரியாக நீங்கள் ஆகிறீர்கள். முதலில் நீங்கள் தூய்மையான பக்தி செய்தீர்கள். இப்போது பக்தியும் தூய்மையற்றதாகி விட்டது. பிறகு உங்களுக்கு பாபாவிடமிருந்து ஆஸ்தி கிடைக்கிறது. பாபாவுக்குக் கூட சங்கமயுகத்தில் தான் வர வேண்டி இருக்கிறது. யுகே-யுகே என்று சொல்வதை வைத்து, 4 யுகங்கள் என்று சொல்லுங்களேன்! பிறகு 24 அவதாரங்கள், மீன்-ஆமை(கச்ச-மச்ச) அவதாரம் எப்படி ஏற்பட முடியும்? கடவுள் ஒருவரே, படைப்பவரும் ஒருவரே, ஆக அவருடைய படைப்பும் ஒன்று தான். நல்லது.

இனிமையிலும் இனிமையான, வெகுகாலம் கழித்து, காணாமல் போய்க் கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகளுக்கு தாய், தந்தையாகிய பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் காலை வணக்கமும். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. சுயராஜ்யத்திற்காக பாபா மீது பலி ஆக வேண்டும். இலட்சியத்தை எப்போதும் முன்னால் வைக்க வேண்டும். முயற்சி செய்து சூரிய வம்சத்தினர் ஆக வேண்டும்.

2. பாபாவிடமிருந்து கிடைத்த ஞானத்தின் மூன்றாம் கண் எப்போதும் திறந்திருக்க வேண்டும். மாயை பிரவேசமாகிவிடக் கூடாது என்பதில் முழு கவனம் வைக்க வேண்டும். யோக அக்கினி மூலம் பாவ கர்மங்களை வென்றவர் (விகர்மாஜீத்) ஆக வேண்டும்.

வரதானம்: அனைத்து சம்பந்தங்களிலும் தந்தையை தன்னுடையவராக ஆக்கி, ஏக்ரஸ்ஸாக இருக்கக்கூடிய நஷ்டோமோகா நினைவு சொரூபம் ஆகுக.

நஷ்டோமோகா (மோகத்தை வென்றவர்), நினைவு சொரூபம் ஆகுவதற்காக அனைத்து சம்பந்தங்களிலும் தந்தையை தன்னுடையவர் ஆக்குங்கள். எந்தவொரு தேக சம்பந்தத்திலும் புத்தியின் பற்றுதல் இருக்கக் கூடாது. ஒருவேளை, எங்கேயாவது பற்று இருந்தது என்றால் புத்தி அலைந்து திரியும். தந்தையை நினைவு செய்வதற்கு அமர்வார்கள், ஆனால், எதன் மீது மோகம் இருக்குமோ, அதனுடைய நினைவே வரும். சிலருக்கு பணத்தின் மீது மோகம் உள்ளது, சிலருக்கு ஆபரணங்கள் மீது, சிலருக்கு ஏதாவது சம்பந்தத்தின் மீது . . . எங்கெல்லாம் இருக்குமோ, அங்கே புத்தி செல்லும். ஒருவேளை, அடிக்கடி புத்தி செல்கிறது என்றால் ஏக்ரஸ் ஆக இருக்க முடியாது.

சுலோகன்: இயற்கையை அடிமை ஆக்கினீர்கள் என்றால் துயரம் தூரமாக ஓடிவிடும்.